செய்தி வெளியீடு எண்: 654 நாள்:28.09.2019

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (28.9.2019) சேலம் மாவட்டம் வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி, நெய்க்காரப்பட்டியில் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் முகாமினை துவக்கி வைத்து ஆற்றிய உரை**

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்த மனுக்களைப் பெற்று அந்த மனுக்களுக்கு தீர்வு காண்பதற்காக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், இந்த நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றன.

ஏற்கனவே நான் கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, எடப்பாடி ஆகிய சட்டமன்றத் தொகுதியிலுள்ள பொதுமக்களிடம் நேரடியாக மனுக்களைப் பெற்று அந்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் வாயிலாக, நீண்டகாலமாக தீர்க்கமுடியாமல் இருக்கின்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் அளித்த மனுக்கள் மீதான நடவடிக்கை குறித்து அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும். அதேபோல், என்ன காரணத்திற்காக மனு நிராகரிக்கப்பட்டது என்பதை அவர்களுக்கு பதில் கடிதம் மூலமாக தெரிவிக்கப்படும். பொதுமக்கள் கொடுக்கின்ற மனுக்கள் பெரும்பாலும் முதியோர் உதவித் தொகை வழங்கிட வேண்டி இருக்கின்றது. அதோடு நீண்டநாட்களாக தாங்கள் வசித்து வருகின்ற வீட்டிற்கு பட்டா வாங்காமல் இருக்கின்றவர்கள் பட்டா வேண்டுமென்று விண்ணப்பித்திருக்கின்றார்கள். அதை அதிகாரிகள் ஆய்வு செய்து தகுதியுள்ளவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல், நிலம், வீடு

வாங்கியுள்ளவர்கள் பட்டா மாறுதல் செய்வதற்கு மனு கொடுத்தால், அந்த மனுவை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஆய்வு செய்து பட்டா மாறுதல் செய்து கொடுக்கப்படும். மக்கள் தங்களின் பிற பிரச்சினைகள் குறித்து மனு கொடுத்தால், அரசு அதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் வழங்கப்படுகின்ற நலத்திட்ட உதவிகள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்கட்டும் திட்டம் மற்றும் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 100 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 90 லட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான மானிய நிதியுதவிகளும்,

கூட்டுறவுத் துறையின் சார்பில் 182 நபர்களுக்கு பயிர்க்கடன் உதவியும், 1 நபருக்கு மத்திய காலக் கடனுதவியும் மற்றும் 48 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவியும், 3 மாற்றுத் திறனாளிகளுக்கு கடனுதவி, என 234 நபர்களுக்கு ரூபாய் 1 கோடியே 62 லட்சத்து 81 ஆயிரம் மதிப்பீட்டிலான கடனுதவிகள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்படுகிறது.

மகளிர் திட்டம் சார்பில் 14 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு கடனுதவியும், 122 நபர்களுக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் மானியமும், என மொத்தம் 136 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 56 லட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டிலான கடனுதவி வழங்கப்படுகிறது.

வேளாண்மைத் துறையின் சார்பில், 20 நபர்களுக்கு பிரதம மந்திரி நுண்ணுயிர் பாசனத் திட்டத்தின் கீழ் மானியமும், 5 நபர்களுக்கு தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் பைப்லைன் அமைக்க மானியமும், ஒரு நபருக்கு தென்னை வளர்ச்சி மானியத்தின் கீழ் மறு நடவு மற்றும் மறு சீரமைப்பு நிதியுதவி என மொத்தம் 26 பயனாளிகளுக்கு ரூபாய் 5 லட்சத்து 89 ஆயிரம் மதிப்பிலான நிதியுதவியும்,

வேளாண் பொறியாளர் துறை சார்பில் வேளாண் இயந்திரமாக்கல் உப இயக்கத் திட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு டிராக்டர் மானியமும், ஆக மொத்தம் இன்றையதினம் நடைபெறுகின்ற இந்த விழாவில் 523 பயனாளிகளுக்கு ரூபாய் 5 கோடியே 21 லட்சத்து 5 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு நலத் திட்ட உதவிகள் நேரடியாக நானே இங்கே வந்து உங்களை சந்தித்து வழங்கியுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் 2011 ஆம் ஆண்டு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து 2019 வரை 8 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட பணிகள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு தமிழகம் முழுவதும் அம்மாவின் அரசால் அனைத்து பகுதிகளிலும் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்கள், குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றைக்கு இந்த ஆட்சியில் எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை என்ற ஒரு தவறான குற்றச்சாட்டை அவர் செல்கின்ற இடத்திலும், பொதுக் கூட்டங்களிலும் பேசி வருகிறார். ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஒவ்வொரு தொகுதியிலும் என்ன என்ன திட்டங்களை நிறைவேற்றியுள்ளது என்பதை சுட்டிக் காட்டுவதற்காக இதை தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஏனென்றால், ஒரு அரசாங்கம் ஒரு தொகுதியிலே எவ்வளவு பணிகளை நிறைவேற்றியிருக்கிறது என்பதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும், எதிர்க்கட்சியும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சில குறிப்புகளை இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் கடந்த 8 ஆண்டுகளில் ரூபாய் 213 கோடியே 38 லட்சம் மதிப்பீட்டில் இந்தத் தொகுதியில் மட்டும் 29,531 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வருவாய்த் துறையில் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 8,360 பயனாளிகளுக்கு ரூபாய் 85 கோடியே 27 லட்சம் மதிப்பிலான பல்வேறு உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா வீட்டுமனை பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ், 4035 பயனாளிகளுக்கு ரூபாய் 10.81 கோடி மதிப்பீட்டில் வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆகவே, பொதுமக்கள் கொடுக்கின்ற மனுக்களை அரசு எந்த அளவுக்கு விரைவாக, வேகமாக நிறைவேற்றி வருகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருத்துத் துறையில் சுமார் ரூபாய் 54.80 லட்சம் மதிப்பீட்டில் தும்பல்பட்டி மற்றும் முருங்கம்பட்டி ஆகிய பகுதியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

ஆகவே, தேர்தல் நேரத்திலே பொதுமக்கள் வைத்த கோரிக்கைகளை அம்மாவினுடைய அரசு இந்த இரண்டு பகுதிகளிலும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

பனமரத்துப்பட்டி, இளம்பிள்ளை மற்றும் கன்னங்குறிச்சி ஆகிய 3 இடங்களில் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.1.87 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆகவே, இன்றைக்கு தரமான மருத்துவ சிகிச்சையை கிராமப்புற மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக 30 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனையை கொடுத்து, புதிய மருத்துவர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டு அங்கே வருகின்றவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்க வேண்டும் என்பதற்காக அரசு மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையையும் நாங்கள் இந்தத் தொகுதியில் துவக்கியிருக்கின்றோம் என்பதைச் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் மூலம் 28,777 பயனாளிகளுக்கு ரூபாய் 66.29 கோடி மகப்பேறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்திய வரலாற்றிலேயே பிறக்கின்ற குழந்தைகளுக்கு உடனே நலத் திட்ட உதவிகள் வழங்குகின்ற ஒரே அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். அதன் மூலமாக இந்தத் தொகுதியில் 2,109 பச்சிளம் குழந்தைகளுக்கு அம்மா பரிசு பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

அம்மா தாய்சேய் நல ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் திட்டத்தின் கீழ் 535 தாய்மார்களுக்கு ரூ.10.70 இலட்சம் மதிப்பீட்டிலான ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதார திட்டத்தின் கீழ் 1,16,085 சானிடரி நாப்கின்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, இவையெல்லாம் ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த பெண்களுக்கு கொடுக்கப்படுகின்ற நலத்திட்ட உதவிகள் என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

இணை இயக்குநர், நலப் பணிகள் மூலமாக 10 படுக்கைகள் கொண்ட நைனாம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 60 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு, இம்மருத்துவமனைக்கு புதிதாக ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக கடந்த 8 ஆண்டுகளில் சுமார் ரூபாய் 60 கோடி மதிப்பீட்டில் 116 கி.மீ. சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. ரூ.26.5 கோடி மதிப்பீட்டில் 40 கி.மீ. சாலைப்பணிகள் அகலப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன.

ரூபாய் 45.00 கோடி மதிப்பீட்டில் தேசிய நெடுஞ்சாலை அரியானூர் சாலை சந்திப்பில் 8 வழி சாலை மேம்பாலம் (Fly Over) கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

வேளாண்மைத் துறையில் ரூ.8.52 கோடி மதிப்பீட்டில் 57,364 விவசாயிகளுக்கு விவசாய பண்ணை இயந்திரங்கள், கருவிகள், விதைகள், சொட்டு நீர் பாசன மானியம், இடுபொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இன்றைக்கு விவசாயிகளுக்கு ஏராளமான திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அடிக்கடி ஸ்டாலின் சொல்லுவார், இந்த முதலமைச்சர் விவசாயி, விவசாயி என்று கூறுகிறார், விவசாயிகளுக்கு என்ன செய்தார் என்று சொன்னார். இந்தத் தொகுதியில் மட்டும் 57,364 விவசாயிகளுக்கு நன்மை கிடைத்திருக்கின்றது என்பதை எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, விவசாயிகள் விவசாயத் தொழில் மட்டும் செய்வது கிடையாது. அவர்களுக்கு கூடுதல் வருமானம் வரவேண்டும் என்பதற்காக தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறையின் சார்பில் இந்தத் தொகுதியில் சுமார் ரூபாய் 9 கோடி மதிப்பீட்டில்

3,524 விவசாயிகள் பயன்பெறும் வகையில் சொட்டு நீர் பாசனம் மானியம், காய்கறி விதைகள், பழச்செடிகள், தேனீ வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்றைக்கு விவசாயிகள் உபதொழிலாக இந்தத் தொழில்களெல்லாம் இன்றைக்கு இடம்பெற்றிருக்கின்றன.

பட்டு வளர்ச்சித்துறையின் சார்பில் இந்தத் தொகுதியில் சுமார் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் 167 விவசாயிகளுக்கு பல்வேறு மானிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண் பொறியியல் துறையில் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் 1,823 விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை பொருளீட்டுக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 123 விவசாயிகளுக்கு சுமார் ரூ.2.50 கோடி பொருளீட்டுக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளன.

சேலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் சுமார் ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் 2,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட 2 கிடங்குகள் மற்றும் பரிவர்த்தனைக் கூடம், 25 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்ப்பதன கிடங்கு மற்றும் சூரிய உலர்த்தி உள்ளிட்ட கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆகவே, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களின் விலை குறைகின்றபொழுது, அதை விற்றால் பெருத்த நஷ்டத்திற்குள்ளாவார்கள். அந்த இழப்பிலிருந்து விவசாயிகளை காப்பாற்ற வேண்டும் என்பதால் இந்த குளிர்ப்பதன கிடங்குகள் கட்டி, விவசாயிகள் உற்பத்தி செய்த விளைபொருட்களை குளிர்ப்பதன கிடங்குகளில் சேமித்து வைத்து, விலை ஏறும்பொழுது விற்பனை செய்யலாம். அவர்களுக்கு பணம் தேவை என்றால், குறைந்த வட்டியில் கடன்

பெறுவதற்கும் வழிவகை செய்யப்படுகிறது. இதெல்லாம் விவசாய பெருங்குடி மக்களுக்கு கிடைத்த நன்மை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் 8 ஆண்டுகளில் 245 ஊரக குடியிருப்புகளுக்கு சுமார் ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் தனி மின்விசை குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வீரபாண்டி மற்றும் பனைமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியங்களில் 46 பள்ளிகள், 47 அங்கன்வாடி மையங்கள் ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குடிநீர் ஆதாரங்களை செறிவூட்டுவதற்காக 62 புனரமைப்புத் திட்டப்பணிகள் சுமார் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆக மொத்தம் சுமார் ரூ.13.89 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, இந்தத் தொகுதி மக்களுக்கு தங்குதடையில்லாமல் குடிநீர் வழங்கக்கூடிய அரசு என்னுடைய அரசு என்பதை குறிப்பிட விரும்புகிறேன். இன்னும் பல பகுதிகளுக்கு குடிநீர் வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளீர்கள், அதையும் நிறைவேற்றுவதற்கு இந்த அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலமாக ரூ.270.00 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள ஆத்தூர், நரசிங்கபுரம் நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 1,345 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இருந்து பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 35 குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 1.08 மில்லியன் லிட்டர் அளவுக்கு சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இளம்பிள்ளை, பனமரத்துப்பட்டி, ஆட்டையாம்பட்டி பேரூராட்சிகள் மற்றும் பனமரத்துப்பட்டி, வீரபாண்டி, சேலம் ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 799 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் சுமார் ரூபாய் 824 கோடி மதிப்பீட்டில் இந்த திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் இந்தப் பகுதியிலுள்ள இலட்சக்கணக்கான மக்கள் குடிநீர் வசதியைப் பெறுவார்கள்.

கூட்டுறவுத்துறையில் 30,625 விவசாய பெருமக்களுக்கு சுமார் ரூபாய் 160 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. 1,534 விவசாய பெருமக்களுக்கு ரூபாய் 9.50 கோடி மத்திய காலக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2,76,433 விவசாய பெருமக்களுக்கு ரூ.900 கோடி நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

349 மாற்றுத்திறனாளிகளுக்கு சுமார் ரூ.1.50 கோடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுவைச் சார்ந்த 774 மகளிருக்கு சுமார் ரூபாய் 20 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. 6,073 நபர்களுக்கு சுமார் ரூபாய் 20 கோடி இதர கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

**8 ஆண்டுகளில் வீரபாண்டி சட்டமன்ற தொகுதியில் மட்டும் கூட்டுறவுத்துறையின் மூலம் மொத்தம் 3,15,788 நபர்களுக்கு சுமார் ரூபாய் 1,110 கோடி அளவில் பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.**

விவசாயிகளின் உபதொழிலாக இருப்பது கால்நடை வளர்ப்பு. கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் சுமார் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் 13,395 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள், விலையில்லா அசல் இன கோழிகள்,

கால்நடை பாதுகாப்பு திட்டம், மாநில தீவன அபிவிருத்தித் திட்டம், மேச்சேரி இன ஆடு அபிவிருத்தித் திட்டம், சிறுபால்பண்ணை அமைக்கும் திட்டம் மற்றும் கால்நடை காப்பீடு திட்டம் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் விவசாயத் தொழிலாளர்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்கவேண்டும் என்பதற்காக அம்மாவினுடைய அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுமார் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் 14 கால்நடை மருந்தகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

இன்றைக்கு நம் குழந்தைகள் சிறப்பான கல்வி கற்க வேண்டும் என்பதற்காக அம்மாவினுடைய அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அப்படி சிறப்பான கல்வியை கற்க வேண்டும் என்று சொன்னால், அந்த குழந்தைகளுக்கு தேவையான வசதிகளை அரசே செய்து கொடுக்க வேண்டும். ஏழ்மையான நிலையிலே இருக்கின்ற திறமையான மாணவர்கள் உயர்கல்வி பெற முடியாது, வேலைக்கு செல்ல முடியாது. ஆகவே, இதையெல்லாம் சிந்தித்து புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு வசதி படைத்த மாணவர்கள் கற்கும் கல்வியை ஏழை குடும்பத்திலே பிறந்த மாணவனும் கற்க வேண்டும், வேலைக்கு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அற்புதமான இந்த திட்டத்தை கொண்டு வந்தார்கள். அதனை அம்மாவின் அரசும் செம்மையான முறையிலே தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அறிவுபூர்வமான கல்வி, விஞ்ஞான கல்வி ஏழை எளிய மாணவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மடிக்கணினி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். மடிக்கணினி

வழங்கும் திட்டத்தின் மூலம் நம்முடைய வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 8 ஆண்டுகளில் 24,474 மாணவ, மாணவிகளுக்கு சுமார் 26 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விலையில்லா மடிக்கணினி வழங்கிய அரசு அம்மாவுடைய அரசு.

பள்ளிக்கு மாணவ, மாணவிகள் குறித்த நேரத்தில் செல்ல வேண்டும், பள்ளி முடிந்து மீண்டும் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனையோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள். இந்த பகுதியிலே மட்டும் ரூ.5.72 கோடி மதிப்பீட்டில் 23,564 மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, வருவாய் ஈட்டும் பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கு உதவித் தொகை, இடை நிற்றலை தவிர்க்க சிறப்பு ஊக்கத் தொகை, இப்படி பல வகையில் மாணவர்களின் கல்வி சிறக்க அம்மாவுடைய அரசு மாணவர்களுக்கு அடித்தளமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பெருமையுடன் சுட்டிக்காட்ட விழைகின்றேன். அதேபோல, விலையில்லா பேருந்து பயணஅட்டையை அம்மாவுடைய அரசு வழங்கி கொண்டு இருக்கிறது.

வீரபாண்டி தொகுதி மக்கள் அந்த பகுதியிலே இருக்கின்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அந்த கோரிக்கையை ஏற்று அம்மாவுடைய அரசு எருமாபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, நிலவாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கீரைபாப்பம்பாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கம்மாளப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஆகிய 4 நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி, இப்பகுதியிலே உள்ள

மாணவர்கள் அங்கேயே உயர்கல்வி பயில்வதற்கான சூழ்நிலையை எங்கள் அரசு உருவாக்கி தந்துள்ளது. அதேபோல நாழிக்கல்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறைகள் மற்றும் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தி தந்துள்ளது. அனைவருக்கும் இடைநிலை கல்வி இயக்கத்தின் சார்பில் ரூ.14.40 கோடி மதிப்பீட்டில் பனமரத்துப்பட்டி மற்றும் வீரபாண்டியில் மாதிரி பள்ளிகள் மற்றும் விடுதி கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆக மொத்தம் இந்த தொகுதியில் ரூ.17.60 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய பள்ளிக் கட்டடங்கள், ஆய்வகங்கள், வகுப்பறைகள், சுற்றுச்சுவர், மாதிரி பள்ளிகள் மற்றும் விடுதிகள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக இப்பகுதியிலே இருக்கின்ற ஏரிகள் தூர் வாரப்படாமல் இருக்கின்றன. பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீரை சேமிப்பும் வகையில், விவசாயிகளைக் கொண்டே நீர்நிலைகளை தூர் வாரும் குடிமராமத்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுப்பணித்துறையின் கீழ் பராமரிக்கப்படும் சுமார் 14,000 ஏரிகள், ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் பராமரிக்கப்படும் சுமார் 26,000 ஏரிகள், ஆக மொத்தம் தமிழ்நாட்டில் இன்றைக்கு 40,000 ஏரிகள் உள்ளன. இவைகளை படிப்படியாக தூர் வாரும் வகையில் குடிமராமத்து திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட தொகையினை ஒதுக்கி, குறிப்பிட்ட ஏரிகளை எடுத்துக் கொண்டு குடிமராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை குறை கூறும் எதிர்க்கட்சியினர் அவர்கள் ஆட்சி காலத்தில் ஒரு துரும்பை கூட கிள்ளிப் போடவில்லை. இத்திட்டத்தின்

மூலம் அரசுக்கு நல்ல பெயர் கிடைத்து வருகிறது என்பதால் அவர்கள் அங்கே தூர் வாரவில்லை, இங்கே தூர்வாரவில்லை என்று குறை கூறுகிறார்கள். ஏரிகளை தூர் வாருவதால் கிடைக்கும் வண்டல் மண் விவசாயிகளுக்கு இயற்கை உரமாக பயன்படுகிறது.

நான் வெளிநாடுகளுக்கு அரசுமுறை பயணம் சென்றுவிட்டு திரும்பிய போது, அடுத்து எந்த நாட்டிற்கு செல்ல இருக்கிறீர்கள் என்று பத்திரிகையாளர்கள் கேட்டார்கள். நான் அடுத்து இஸ்ரேலுக்கு செல்ல உள்ளேன் என்று தெரிவித்தேன். அங்கு விவசாயிகள் இருக்கின்ற நீரை சிக்கனமாக பயன்படுத்தி நல்ல விளைச்சலை பெற்று வருகிறார்கள். குறைந்த நீரிலே அதிக நிலப்பரப்பில் விவசாயம் செய்கிறார்கள். நம்முடைய பகுதியில் 1 ஏக்கர் நிலப்பரப்பிற்கு விவசாயம் செய்ய பயன்படுத்தும் நீரை அங்கு 7 ஏக்கருக்கு பயன்படுத்துகிறார்கள். ஆகவே, இதை பார்வையிடுவதற்காக நான் இஸ்ரேல் செல்ல உள்ளேன் என்று தெரிவித்தேன். இன்றைக்கு நகரப் பகுதியிலே வெளியேறுகின்ற கழிவுநீரை சுத்திகரித்து மறுசுழற்சி செய்து அருகாமையில் இருக்கக் கூடிய ஏரியில் சேமித்து வைக்கின்ற போது அது நிலத்தடி நீரை உயர்த்தி விவாயத்திற்கு பயன்படுகிறது. இப்படிப்பட்ட டென்னாலஜியை பார்வையிடுவதற்காக நான் இஸ்ரேல் செல்வேன் என்று சொன்னேன். உடனே எதிர்க்கட்சி தலைவர் திரு. ஸ்டாலின் அவர்கள் சொல்கிறார், இங்கே காவேரியில் தண்ணீர் உபரியாக கடலில் கலக்கிறது இதையெல்லாம் சேமிக்க இயலாத முதலமைச்சர் அங்கே போய் பார்வையிடுகிறார் என்ற சொல்கிறார். திமுக ஆட்சியில் மேட்டூர் முதல் கொள்ளிடம் வரை எத்தனை தடுப்பணைகள் கட்டினீர்கள். ஒரு தடுப்பணை கூட கட்டவில்லை. எதுவுமே செய்யாத ஸ்டாலின் எங்களைப் பற்றி பேசுவதற்கு எந்த

தகுதியும் இல்லை என்பதை இந்த நேரத்திலே கோடிட்டு காட்ட விரும்புகிறேன். ஏன் என்றால் நீர் மேலாண்மை திட்டத்தை செயல்படுத்துவதற்காக தனி அமைப்பையே நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம். நான் விவசாயி என்ற காரணத்தினாலே நீரினுடைய அருமையை நான் தெரிந்திருக்கின்றேன். மனிதனுக்கு உயிர் போல, விவசாயிக்கு நீர் மிக முக்கியமானது. அந்த நீரை காப்பதற்காக நீர் மேலாண்மை திட்டத்தை உருவாக்குவதற்காக ஒய்வு பெற்ற பொறியாளர்களை நியமித்து தமிழகம் முழுவதும் எங்கெல்லாம் உபரியாக நீர் வீணாகின்றதோ அதை எல்லாம் தேக்குவதற்கு நீங்கள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று சொல்லி, அவர்கள் எல்லாம் ஆய்வுப் பணி மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்ய இருக்கிறார்கள். அந்த வகையிலே மேட்டூரிலிருந்து கொள்ளிடம் வரை திமுக ஆட்சியில் ஒரு தடுப்பணை கூட கட்டப்படாமல், அதற்கு எந்த வழிவகையும் செய்யாத திமுகவைச் சேர்ந்தவர்கள் எங்களைப் பற்றி பேசுவதற்கு எந்த தகுதியும் இல்லை என்பதை இந்த நேரத்தில் கோடிட்டு காட்ட விழைகின்றேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேட்டூரிலே உற்பத்தியாகி மழைக்காலங்களிலே பெய்கின்ற மழைநீர் வீணாக கடலில் சென்று கலப்பதை தடுப்பதற்காக கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்காக ஆதனூர் குமாரமங்கலம் என்ற இடத்திலே அந்த திட்டம் மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக அம்மா அறிவித்தார்கள். அம்மாவுடைய அரசு இன்றைக்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்தப் பணி துவக்கப்பட்டு விட்டது. அந்தப் பணி நடைபெற்று கொண்டு இருக்கிறது. அதைக்கூட தெரியாமல் ஸ்டாலின் அவர்கள் சொல்கிறார், பேட்டி கொடுக்கின்றார். அம்மா

ஆரம்பித்த திட்டத்தையாவது இந்த முதலமைச்சர் நிறைவேற்ற வேண்டும் என்று ஸ்டாலின் அவர்களே தெரியாமல் பேச வேண்டாம். யாரோ எழுதி கொடுத்ததை தெரியாமல் பேச வேண்டாம். இந்த திட்டம் துவங்கப்பட்டு விட்டது. ஆதனூர் குமாரமங்கலத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட அந்த தடுப்பணை இன்றைக்கு கட்டப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். மேட்டூரிலிருந்து கொள்ளிடம் வரை எந்த எந்த இடத்திலே தடுப்பணை கட்ட வேண்டும் என்று இன்றைக்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையிலே முதல்கட்டமாக கரூருக்கு அருகிலே ஒரு தடுப்பணை கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை இன்றைக்கு தயாரிக்கப்பட்டு வருகிறது. இன்னும் நான்கு மாதத்தில் அந்த ஒப்பந்தம் போடப்பட்டு அந்தப் பணி துவங்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். மேட்டூர் முதல் கொள்ளிடம் வரை மூன்று நான்கு தடுப்பணைகள் கட்ட அம்மாவுடைய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவதற்கு 1000 கோடி ரூபாய் ஒதுக்கி 3 ஆண்டுகளில் இந்த திட்டம் நிறைவேற்றப்படும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் அரசு அம்மாவுடைய அரசு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு கேரள மாநிலங்களுக்கு இடையேயான முல்லை – பெரியாறு பிரச்சனை, ஆழியாறு – பரம்பிகுளம் பிரச்சனை, பாண்டியாறு – புன்னம்புழா பிரச்சனை, செண்பகவல்லி அணை பிரச்சனை, நெய்யாறு பிரச்சனை இப்படி பல்வேறு பிரச்சனைகள் இருந்து வருகின்றன. எங்களுடைய மக்களுக்கு தண்ணீர் வேண்டும், விவசாயத்திற்கு தண்ணீர்

வேண்டும் என்று கேரள முதலமைச்சருக்கு கடிதம் எழுதினேன். நீங்கள் நேரில் வாருங்கள் இது குறித்து பேசுவோம் என்ற அழைப்பு விடுத்தார்கள். அந்த அழைப்பினை ஏற்று, **15** ஆண்டுகளுக்கு பின்னர் தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையில் கேரளாவிற்கு நானே நேரடியாக சென்று கேரள முதலமைச்சரை சந்தித்தேன்.

தமிழகத்திலே அதிக ஆண்டுகள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர் திரு. துரைமுருகன் அவர்கள் தான். நீங்கள் பதவியில் இருந்த காலத்திலே முல்லை – பெரியாறு பிரச்சனையை முடித்திருக்கலாம். பாலாறு பிரச்சனையாவது தீர்த்திருக்கலாம். நீங்கள் பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது. அப்படி இருக்கின்ற போது, ஒரு முயற்சி செய்கின்றோம். அந்த முயற்சிக்கு நீங்கள் குரல் கொடுத்தால் நன்றாக இருக்கும். அதை விடுத்து திரு.துரைமுருகன் அவர்கள், இந்த அரசு செயல்படுவது போல காட்டுவதற்காக கேரளாவிற்குச் சென்று முதலமைச்சரை சந்தித்தார் என்ற தோரணியில் கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

நாங்கள் குழு அமைக்கப்படும் என்று சொன்னோம். ஒரு பிரச்சினை தீர்க்க வேண்டுமென்றால், குழு அமைத்துத்தான் பிரச்சினை தீர்க்க முடியும். ஆகவே, இரண்டு மாநிலங்களிலுள்ள உயர் அதிகாரிகளின் மூலமாக குழுக்கள் அமைக்கப்படுகின்றது. கேரளாவில் ஒரு குழு, தமிழ்நாட்டில் ஒரு குழு. இரண்டு குழுக்களும் சந்தித்துப் பேசி நம்முடைய மாநிலத்தில் என்னென்ன பிரச்சினைகள், கேரளாவில் என்னென்ன பிரச்சினைகள் என்பதை கலந்து பேசி இறுதி வடிவம் கொடுக்கப்படும். ஆகவே, சுமார் இரண்டு மாத காலத்தில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சியை நாங்கள் எடுப்போம்

என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். உங்களைப் போல், பல ஆண்டு காலம் கிடப்பிலே போடுகின்ற அரசு என்னுடைய அரசு அல்ல. எந்தத் திட்டத்தை கொண்டுவந்தாலும், அந்தத் திட்டத்தை அறிவித்தவுடன், அந்தத் திட்டத்தை கண்காணித்து நடைமுறைப்படுத்தும் அரசு எங்களுடைய அரசு என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கின்றோம். அந்த வகையில், இன்றைக்கு நான் சொன்ன திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு எங்களுடைய அரசு விரைந்து செயல்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஆனைமலையாறு திட்டம் குறித்தும் மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்களிடம் பேசியிருக்கின்றோம். அதுவும் அந்தக் குழுவின் மூலமாக விசாரிக்கப்பட்டு ஒரு முடிவு காணப்படும். ஆகவே, இரண்டு மாநில முதலமைச்சர்களும் சந்தித்து பேசுகின்றபொழுது தான் ஒரு நல்ல தீர்வு எட்டப்படும் என்ற அடிப்படையில்தான் நாங்கள் சந்தித்து பேசியிருக்கின்றோம். நிச்சயமாக நாங்கள் எடுத்த முயற்சி வெற்றி பெறும். ஆகவே, அதைப்பற்றியெல்லாம் திமுக கவலைப்படத் தேவையில்லை. உங்கள் ஆட்சியில் பதவியை மற்றும் அனுபவித்தீர்கள், மக்களைப் பற்றி கவலைப்படவில்லை. எங்களுடைய காலத்தில் மக்களைப் பற்றி மட்டும் சிந்தித்துக் கொண்டு இருக்கின்றோம், அவர்களுக்கு உள்ள பிரச்சினைகளை எப்படி தீர்க்க வேண்டும் என்பதை ஆய்வு செய்து, சிந்தித்து செயலாற்றுகின்ற அரசு எங்களுடைய அரசு என்பதை நிரூபித்துக் காட்டுவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது, பணிபுரியும் மகளிருக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். 2017–18 மற்றும் 2018–19–ஆம் ஆண்டுகளில் மாவட்ட தேர்வுக்குழு மூலம் அரசு மானியத்தில் 694 உழைக்கும் மகளிருக்கு அம்மா இரு சக்கர வாகனம் வழங்க தேர்வு செய்யப்பட்டு, 347 உழைக்கும் மகளிருக்கு தலா ரூ.25,000 வீதம் ரூ.86.75 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

சுமார் ரூபாய் 260 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம் மூலம் சுமார் ரூ.26 கோடி மதிப்பீட்டில் 880 குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

மாவட்ட தொழில் மையத்தின் மூலமாக, 103 பயனாளிகளுக்கு ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் புதிய தொழில்கள் தொடங்குவதற்கான மானியம் வழங்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களின் மூலம் ரூ.2.50 கோடி மதிப்பீட்டிலும், ஆதிதிராவிட நலத்துறையின் மூலமாக சுமார் ரூ. 2 கோடி மதிப்பீட்டிலும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் வீரபாண்டி சட்டமன்ற தொகுதியில் மட்டும் ரூ.11.73 கோடி மதிப்பீட்டில் 11,457 மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள், உதவித்தொகைகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் சட்டக் கல்வி பயில வேண்டும் என்பதற்காக அம்மாவினுடைய அரசு, சேலத்தில் அரசு சட்டக் கல்லூரியை துவக்கி பெருமை சேர்த்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியானது இணை பதிவாளர் தரத்திலிருந்து கூடுதல் பதிவாளர் தரத்திற்கு தரம் உயர்த்தப்படும். நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக பல்வேறு சாலைகள் சீரமைக்கப்பட்டிருக்கின்றன., பல்வேறு பாலப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பொதுமக்களும், தாய்மார்களும் கொடுக்கின்ற மனுக்களை பரிசீலித்து தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்து, இந்த அரசு உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்கள் என்ன எண்ணுகின்றார்களோ, அதை நிறைவேற்றுகின்ற அரசு எங்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, நான் முதலமைச்சராக இருந்தாலும், உங்களையெல்லாம் சந்தித்து மனுக்களைப் பெற்று, அந்த மனுக்களுக்கு தீர்வு காணவேண்டும் என்பதற்காகத் தான், நேரடியாக மனுக்களைப் பெறுகிறேன் என்பதைச் சொல்லி, மிக சிறப்பான ஏற்பாடுகளை செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும், செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்கின்ற ஊடக மற்றும் பத்திரிகை நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**